# பரதவர்களின் சமூக பண்பாட்டு அம்சங்கள் - உடப்பு கிராமத்தை மையமாக கொண்ட ஆய்வு

முழுப் பெயர்: அப்துல் நமாஸ் நஸ்மியா

பதிவு இலக்கம்: **EU/IS/2016/AC/316**

சுட்டெண் : **CS 7216**

LIBRARY
22 DEC 2023
EUSL, SRI LANKA.

FAC 1180
Project Report
Library - EUSL

இவ்வாய்வுக் கட்டுரையானது வரலாறு இளங்கலைமாணி சிறப்பு கற்கைநெறியின் இறுதி வருடப் பரீட்சையின் ஓர் அலகாக கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது.

வரலாற்றுத்துறை

கலை கலாசார பீடம்

கிழக்குப் பல்கலைக்கழகம்

இலங்கை

2023.

# ஆய்வுச் சுருக்கம்

இலங்கையில் புராதன காலம் முதலாக பரதவர் என்ற சமூகப் பிரிவினர் வாழ்ந்துள்ளனர். பரதவர் என்போர் மீன்பிடியை பிரதான தொழிலாகக் கொண்டதுடன் வாணிபம், முத்துக்குளிப்பு, சங்கு குளிப்பு என்பவற்றிலும் ஈடுபட்டவர்களாவர். இந்த நடவடிக்கைகள் இலங்கையில் பரதவர் குடியிருப்புகள் ஏற்படுவதற்கு ஏதுவாயிருந்தன. சமகாலத்தில் இம்மக்கள் பரவி வாழ்கின்ற போதிலும் இவர்களது வரலாறு, சமூக, பண்பாட்டு அம்சங்கள் முழுமையாக ஆய்வு செய்யப்படாததாகவே காணப்படுகிறது. உடப்புக் கிராமத்தில் வாழும் பரதவர்களின் சமூக, பண்பாட்டு அம்சங்கள் ஈழத்தின் ஏனைய மக்களுடன் ஒப்பிடுகின்றவிடத்து தனித்துவமாகக் காணப்படுகிறது. இவர்களது தோற்றம், இடப்பெயர்வு, சமூகப்பிரிவுகள், சமூக, பண்பாட்டு அம்சங்கள் ஆகியவற்றை வெளிப்படுத்துவதே இவ்வாய்வின் நோக்கமாகும். இதற்கு வரலாற்றியல் ஆய்வோடு, ஒப்பியல் ஆய்வு முறையும் பயன்படுத்தப்படுகின்றது. கிராமிய தெய்வ வழிபாடு, இவர்களால் அமைக்கப்பட்ட ஆலயங்கள் தென்னிந்திய சாயலை ஒத்ததாக காணப்படுகிறது. பிறப்பு, திருமணம், இறப்பு என்பவற்றில் மேற்கொள்ளப்படும் சில சடங்குகள் இலங்கையில் வேறு பிரதேசங்களில் காணப்படவில்லை. மீன்பிடி பிரதான தொழிலாக காணப்படுவதோடு, மீன்பிடித் தொழிலுக்காக பாடப்படும் அம்பாப் பாடல் முக்கியம் பெறுகிறது. இவர்களது தீ மிதிப்பு விழாவில் தனிச்சிறப்பம்சம் காணப்படுகிறது. கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை என்பன விஜயநகர நாயக்கர் கால கலைப் பாணியை ஒத்ததாகும். உடப்பில் காணப்படும் பரதவர் இலங்கையிலுள்ள ஏனைய இந்துக்களை விட தனித்துவமான பண்பாட்டம்சங்களை கொண்டிருக்கின்றனர். இவர்கள் கிராமத்தில் வசிப்பதால் இவர்களது பண்பாட்டம்சங்கள் வெளியுலகிற்கு தெரியாத நிலையில் காணப்படுகிறது. ஆனால் தற்போது நவீன தொடர்பாடல் வசதியின் காரணமாக இவர்கள் தங்களது வரலாறுகளையும், பண்பாட்டம்சங்களையும் வெளியுலகிற்கு தெரியப்படுத்துகின்றனர். எனினும் இந்த சமூகத்தவரால் பேணப்பட்ட சில பாரம்பரிய முறைகள் வெளியுலக தொடர்பினால் அதன் தனித்துவத்தை இழந்துள்ளது.



அரும்பதங்கள் : பரதவர், கரையார், கரைவலை, திரௌபதையம்மன், பூமிதிப்பு, திருவிழா, சடங்குகள்

# பொருளடக்கம்


| விடயம் | பக்கம் |
|---|---|
| முன்னுரை | I |
| நன்றியுரை | II |
| ஆய்வுச் சுருக்கம் | III |
| 1. ஆய்வு அறிமுகம் | 1 - 5 |
| 2. பரதவர் பற்றிய அறிமுகம் | 6 - 21 |
| 3. உடப்பு கிராம பரதவர் சமூகம் | 22 - 39 |
| 4. ஆரம்பகாலத்திலிருந்து தற்காலம் வரை பரதவர்களது தனித்துமான பண்பாட்டு அம்சங்கள் | 40 - 132 |
| 5. முடிவுரை | 133 - 138 |
| உசாத்துணை | 139 - 141 |
| பின்னிணைப்பு | V - VII |